# NEWS LETTER

**Contact Us !**

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

Vivekananda Community Foundation




## எமது நன்கொடையாளரின் வருகை



எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நன்கொடையாளர்களில் ஒருவரான திரு.ரவீந்திரன் அவர்களின் இலங்கை வருகையைத் தொடர்ந்து எமது விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரிக்கான விஜயம் இடம்பெற்றது. இதன்போது கல்லூரியின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதோடு மட்டுமன்றி மாணவர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







# மாதம் ஒரு களம்



எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்டமுகாமையாளரின் தலைமையில் விசேட தேவையுடையோருடனான கலந்துரையாடல் ஆரையம்பதியில் அமைந்துள்ள புகலிடத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.





எமது அறக்கட்டளையினூடாகப் பொறுப்பெடுக்கப்பட்ட மாணவி ஒருவரின் குடும்பத்திற்கான வாழ்வாதார உதவி எமது நன்கொடையாளரான திரு. ரகுபதி நடராஜா அவர்களினால் எமது அறக்கட்டளையினூடாக வழங்கிவைக்கப்பட்டது.

அவர்கள் வாழ்வாதாரமாகப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதையடுத்து அதன் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு பயிர்ச்செய்கைக்கான நீர் வசதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு வாழ்வாதார ஊக்குவிப்புத்தொகை வழங்கப்பட்டதோடு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அம்மாணவியின் தந்தைக்கு நாளாந்த வாழ்வில் முகம் கொடுக்கும் சவால்களை எதிர்கொள்வதற்கான உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



எமது அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பினூடாக விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற OM&IT பாடநெறியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் சந்திப்பு விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் கொம்மாதுறைக் கிளையில் இடம்பெற்றது. மாணவர்களின் அடைவு மட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மட்டுமன்றி அவர்களிடையே சூழல் நேயப் பண்பினை வளர்க்கும் நோக்கில் மட்/ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் வித்தியால பாடசாலையினருக்கு Plastic சேகரிப்பு கொள்கலன் ஒன்று எமது திட்டமுகாமையாளரால் வழங்கி வைக்கப்பட்டது.



விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது.

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 15,000**
Nandavanam Elders Home

**Sponsor a Pre-School**
per Month
- LKR 65,000
- (With Meal)

Teachers Allowance only
- LKR 20,000

**Special Meal per Day - LKR 20,000**
Jeevananda Girls Home

**Sponsor a Youth per Technician**
For a better career
- LKR 10,000

**Sponsor a Marginalized Student**
per Month
- LKR 3,500

**Nutrion Pack for Pugalidam (Special Need Center)**
per Pack
- LKR 3,500

**Education Materials For School students**
per Pack
- LKR 5,000